பணிப் பாதுகாப்பு, பணப் பலன்கள் உறுதிசெய்யப்படும்!

துப்புரவுப் பணியாளர்கள் வேலை நிறுத்தத்தைக் கைவிட்டு பணிக்குத் திரும்ப வேண்டும்!

சென்னை மாநகராட்சி வேண்டுகோள்!

சென்னை, ஆக.13-

பெருநகர சென்னை மாநகராட்சியில் இராயபுரம் மற்றும் தி.ரு.வி.க. நகர் மண்டலங்களில் (மண்டலம் 5 மற்றும் 6) திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் தனியார் நிறுவனத்தின் வாயிலாக, கடந்த 16.07.2025 முதல் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. இந்நிலையில் இதற்கு எதிர்ப்பு தெரிவித்தும், பணி நிரந்தரம் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தியும் கடந்த 01.08.2025 முதல் வேலை நிறுத்தத்தில் சுய உதவிக் குழுவின் வாயிலாக பணியாற்றும் தற்காலிக தூய்மைப் பணியாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர். இந்த போராட்டத்தை கைவிட்டு - பணிக்குத் திரும்புமாறு மாநகராட்சி கேட்டுக்கொண்டுள்ளது.

சென்னை மாநகராட்சியின் அறிக்கை வருமாறு:-

கடந்த 2011-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சியுடன், 9 நகராட்சிகள், 8 பேரூராட்சிகள் மற்றும் 25 கிராம ஊராட்சிகள் இணைக்கப்பட்டு, வார்டுகளின் எண்ணிக்கை 155ல் இருந்து 200 ஆக உயர்த்தப்பட்டு, 15 மண்டலங்களாக பிரிக்கப்பட்டு ள்ளது.

இவ்வாறு சென்னை மாநகராட்சி விரிவுபடுத்தப்பட்ட போது, திடக்கழிவு மேலாண்மைப் பணிகளை மேற்கொள்ளத் தேவைப்படும் கூடுதல் தூய்மைப் பணியாளர்கள், தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ், சுய உதவிக் குழுக்கள் மூலமாக தற்காலிக அடிப்படையில் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

இந்த முறையில், பணியாளர்களின் வருகை அடிப்படையில், தினக்கூலி ஊதியம் கணக்கிடப்பட்டு, அவர்களை பணியில் ஈடுபடுத்திய சுய உதவி குழுவின் வங்கி கணக்கிற்கு பணம் செலுத்தப்படுகிறது. பின்னர், அந்த வங்கி கணக்கிலிருந்து தற்காலிக தூய்மைப் பணியாளர்களின் ஊதியமானது ஒவ்வொருவரின் வங்கி கணக்கிற்கும் சுய உதவி குழுவால் செலுத்தப்பட்டு வருகிறது.

இவ்வாறு மேற்கூறிய வெளி முகமைப் பணியானது (Outsourcing) சுய உதவி குழுக்களின் வாயிலாக மேற்கொள்ளப்பட்டு வந்தது.

கடந்த 2020ஆம் ஆண்டில் இருந்து, 10 மண்டலங்களில் முழுமையாகவும் 1 மண்டலத்தில் பகுதியாகவும் பொது தனியார் பங்களிப்பு முறைமையில் (PPP Mode) திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேற்கூறிய 11 மண்டலங்களிலும், ஏற்கனவே சுய உதவிக் குழுக்களின் மூலம் பணியாற்றி வந்த 4994 தற்காலிக தூய்மைப் பணியாளர்களை தனியார் நிறுவனங்கள் ஈர்த்துக் கொண்டு, பணிகளை மேற்கொண்டு வருகின்றன. அவர்களுக்கான ஊதியம் தற்போது இந்த நிறுவனங்களால் வழங்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில், சென்னை பெருநகர மாநகராட்சியில் எஞ்சியுள்ள நான்கு மண்டலங்களில், மண்டலம் 5 மற்றும் 6 இல் மேற்கூறிய அதே முறை நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்த மாற்றத்தின் போது, கடந்த ஆண்டுகளைப் போலவே, இந்த தற்காலிக பணியாளர்கள் அனைவரும் புதிய நிறுவனத்தின் கீழ் இணைந்து பணியாற்றிட வழி வகை செய்யப்பட்டது.

சென்ற ஆண்டுகளில் 11 மண்டலங்களில் தூய்மை பணி முறை மாற்றப்பட்டபோது செயல்படுத்தப்பட்ட அதே நடவடிக்கைகள் தற்போதும் பின்பற்றப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் இந்த இரண்டு மண்டலங்களில், சுய உதவிக்குழு அமைப்பின் கீழ் பணியாற்றி வந்த தற்காலிக தூய்மைப் பணியாளர்கள் இதனை ஏற்காமல், தங்களை பணி நிரந்தரம் செய்யவேண்டும் என்றும் தனியார் நிறுவனத்தின் கீழ் பணிபுரிய மாட்டோம் என்றும் வலியுறுத்தி ரிப்பன் கட்டட வளாகத்தின் முன்புறத்தில், கடந்த 01.08.2025 முதல் காத்திருப்புப் போராட்டத்தை தொடங்கி நடத்தி வருகின்றனர். இதனால் பல்வேறு சேவைகளைப் பெறுவதற்காக சென்னை மாநகராட்சிக்கு வரும் ஆயிரக்கணக்கான பொதுமக்களும் பாதிக்கப்படுகின்றனர்.

இதனைத் தொடர்ந்து, நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்கள், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் அவர்கள் கடந்த 06.08.2025 அன்றும், அதனைத் தொடர்ந்து இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்களாலும், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர், இணை ஆணையர் (சுகாதாரம்) மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் ஆகியோராலும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தூய்மைப் பணியாளர்களின் பிரதிநிதிகளுடன் 12க்கும் மேற்பட்ட சுற்றுக்கள் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டன.

இந்தப் பேச்சுவார்த்தைகளின் போது, பெருநகர சென்னை மாநகராட்சியில் கடந்த 2020ஆம் ஆண்டில் மண்டலம் 1, 2, 3, மற்றும் 7ல் பகுதி (3 வார்டுகள்), 9, 10, 11, 12, 13, 14, 15 ஆகிய மண்டலங்களில் தூய்மைப் பணி முறை மாற்றப்பட்டபோது அம்மண்டலங்களில் பணிபுரிந்து வந்த சுய உதவிக்குழுக்களின் தற்காலிகத் தூய்மைப்பணியாளர்கள், சம்பந்தப்பட்ட தனியார் நிறுவனங்களில் பணியில் சேர்ந்து, பணியாற்றி வருவதைப்போல, மண்டலம் 5 மற்றும் 6ல் தற்போது பணியாற்றி வரும் தற்காலிக தூய்மைப்ப ணியார்களும் உரிய பணி பாதுகாப்பு மற்றும் நலத் திட்ட உதவிகளுடன் பணியில் சேர்ந்து, தங்களது பணிகளை மேற்கொள்ள கேட்டுக் கொள்ளப்பட்டது.

மேலும், போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தூய்மைப் பணியாளர்களின் சார்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குகளும், தொழில் தீர்ப்பாயத்தில் முறையீடு களும் செய்யப்பட்டுள்ளதால், அவற்றின் மீது வரும் முடிவுக்குட்பட்டு, தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் மண்டலம் 5 மற்றும் 6ல் வசிக்கும் மற்றும் வந்து செல்லும் ஏறத்தாழ 20 லட்சம் பொதுமக்களுக்கான பொது சுகாதார சேவைகள் பாதிக்கப்படுவது மிக முக்கியமான பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. போராட்டம் தொடர்வதால் இந்த மண்டலங்களில் தூய்மைப் பணிகளில் தொய்வு ஏற்பட்டு குப்பைகள் தேங்கி மக்களுக்கு பெரும் சுகாதார பாதிப்பு ஏற்படும் சூழ்நிலை உள்ளது.

இதனால் பொதுமக்கள் பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டிய பொறுப்பு சென்னை மாநகராட்சிக்கு உள்ளதால் இதற்கான அனைத்து முயற்சிகளையும் சென்னை பெருநகர மாநகராட்சி தொடர்ந்து எடுத்து வருகின்றது.

கடந்த 2020-ஆம் ஆண்டு, பல்வேறு மண்டலங்களில் பணிபுரிந்து விருப்பக் கடிதம் அளித்த 4994 பணியாளர்களும் உர்பேசர் (Urbaser) மற்றும் ராம்கி (Ramky) ஆகிய தனியார் நிறுவனங்களில், அச்சமயம் பணியில் ஈர்த்துக் கொள்ளப்பட்டனர்.

தற்பொழுது மண்டலம் 5 மற்றும் 6ல் மேற்கொள்ளப்படும் தூய்மைப்பணிகள் ராம்கி (Ramky) நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டு, 16.07.2025 முதல் அந்நிறுவனம் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் மேற்கொண்டு வருகின்றது.

இந்நிறுவனம், ஒப்பந்தப்படி, மொத்தம் 3,809 தூய்மைப் பணியாளர்களை பணியில் நியமிக்க வேண்டும். தற்போது வரை 1,770 பணியாளர்களை இந்நிறுவனம் பணிய மர்த்தியுள்ளது. மீதமுள்ள 2,039 பணியிடங்கள், ஏற்கனவே பணியாற்றி வந்த சுய உதவிக் குழுக்களின் தற்காலிக தூய்மைப் பணியாளர்களுக்காக பெருநகர சென்னை மாநகராட்சி அறிவுறுத்தலின்படி ஒதுக்கப்பட்டுள்ளன. இதில் 300 தற்காலிக தூய்மைப் பணியாளர்கள் பணியில் சேர்ந்து பணியாற்றி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. எனவே எந்தவொரு தற்காலிக தூய்மைப் பணியாளரும் நீக்கப்படவோ, பணி மறுப்பு செய்யப்படவோ இல்லை என்பது தெளிவுபடுத்தப்படுகிறது.

இதுநாள் வரை சுய உதவிக் குழுக்கள் மூலமாகவே பணியில் ஈடுபடுத்தப்பட்ட தற்காலிக தூய்மைப் பணியாளர்கள், தற்போது தனியார் நிறு வனத்தில் தொழிலாளர் சட்ட விதிமுறைகளுக்குட்பட்டு பணியாளர்களாக ஈடுபடுத்தப்படவுள்ளனர். எனவே இந்த புதிய முறையின் கீழ் இதுவரை கிடைக்காத பணிப்பாதுகாப்பும் பல சலுகைகளும் இந்தப் பணியாளர்களுக்கு கிடைத்திட வழி ஏற்பட்டுள்ளது. இப் பணியாளர்களுக்கு

1. வருங்கால வைப்பு நிதி (PF), 2. ஊழியம் மற்றும் மருத்துவக்காப்பீடு (ESI), 3. போனஸ், 4. பண்டிகை கால சிறப்பு உதவிகள், 5. திருமண உதவித்தொகை மற்றும் கல்வி/ உயர்கல்வி உதவித்தொகை, 6. இன்சூரன்ஸ் திட்டத்தில் விபத்து மரணம்/ இயற்கை மரணம் உள்ளிட்டவற்றிற்கு நிவாரண இழப்பீடுநிதியும் வழங்கப் படுகின்றன.

7. ஆண்டுதோறும் முழு உடல் பரிசோதனை செய்யப் படுகின்றன.

தொழிளாலர் நல நிதி

1. திருமண உதவித் தொகை - ரூ. 20,000/ வரை 2. கல்வி உதவித் தொகை - ரூ. 12,000/ வரை 3. மரண நிகழ்வுக்கான நிதி உதவி 4. புத்தகத்திற்கான நிதி உதவி 5. கணினி பயிற்சி நிதி உதவி

விடுப்பு மற்றும் விடுமுறை நாட்கள் பலன்கள்

1. தற்செயல் விடுப்பு - 12 நாட்கள் (பணமாக மாற்றும் வசதியும் உண்டு)

2. ஈட்டிய விடுப்பு - 12 நாட்கள் (பணமாக மாற்றும் வசதியும் உண்டு)

3. தேசிய விடுமுறை நாட்கள் (இரட்டிப்பு சம்பளம் பெரும் வசதியும் உண்டு) பணியாளர்கள் இந்த நாட்களில் பணி செய்யாவிட்டாலும் சம்பளத்துடன் கூடிய விடுப்பும் பெறும் வசதி உண்டு.

மேலும் இலவச சீருடை, பாதுகாப்பு உபகரணங்கள், காலணிகள், மழைக்கால உடை மற்றும் சுகாதார பொருட்களும் வழங்கப்படுகின்றன. இதனுடன் தமிழ் நாடு அரசின் தூய்மைப் பணியாளர் நலவாரியம் மூலமாக பல்வேறு உதவிகள் மற்றும் சலுகைகளும் வழங்கப்படும்.

மேற்கூறிய பணி மற்றும் ஊதிய விவரங்கள் குறித்து விரிவாக தற்காலிக பணியாளர்களின் பிரிவினர்களுக்கு விளக்கப்பட்டுள்ளது.

சுய உதவிக் குழுவின் மூலமாக பணிகளை செய்து வந்த தற்காலிக தூய்மைப் பணியாளர்கள் அனைவரையும், தனியார் நிறுவனம் பணியில் சேர்ப்பதையும் அவர்களுக்கு உரிய பணிப்பாதுகாப்பு மற்றும் பணப் பலன்கள் வழங்குவதையும் பெருநகர சென்னை மாநகராட்சி 100 சதவீதம் உறுதி செய்யும் எனவும் திட்டவட்டமாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தற்காலிக தூய்மைப் பணியாளர்கள் அனைவரும் பொதுநலன் கருதியும், தங்களது பணிப்பாதுகாப்பு குறித்த உண்மை நிலையினை புரிந்து கொண்டும், உயர்நீதிமன்ற வழக்குகளின் தீர்ப்பு மற்றும் தொழில் தீர்ப்பாயத்தின் முடிவுகளை எதிர்நோக்கி, உடனடியாக வேலை நிறுத்தத்தை கைவிட்டு பணிக்கு திரும்ப வேண்டும் என அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு சென்னை மாநகராட்சி கேட்டுக் கொண்டுள்ளது.

வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத் திறனாளி குடும்ப அட்டைதாரர்களின் இல்லத்திற்கே சென்று ரேசன் பொருட்களை விநியோகம் செய்யும் தமிழ்நாடு முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தை சென்னையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று தண்டையார்பேட்டையில் தொடங்கி வைத்தார். இதனை தொடர்ந்து பல்லாவரம் சட்டமன்ற தொகுதி பம்மல் பகுதியில் வீடு வீடாக. சென்று மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ. முதியவர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு பொருட்களை விநியோகம் செய்தார். உடன் மண்டல தலைவர் பல்லாவரம் தெற்கு பகுதி கழகச் செயலாளர் வே.கருணாநிதி, மாமன்ற உறுப்பினர் மதினா பேகம், கூட்டுறவு வட்ட அதிகாரிகள், சார்பதிவாளர் , வட்ட செயலாளர் அப்பாஸ் சிவக்குமார் பகுதி கழக வட்டக் கழக நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்.

சோழிங்கநல்லூர் கிழக்குப் பகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி, 15 வது மண்டலம், 195 வது வார்டு, அடையாறு மகளிர் பண்டகசாலை (லிட்) கடை எண். 26.ல் வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் இல்லங்களுக்கு சென்று குடிமை பொருட்கள் வழங்கும் "முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தை" மாமன்ற உறுப்பினரும், வட்டக் கழகச் செயலாளருமான க.ஏகாம்பரம் முன்னிலையில் மண்டலக் குழுத் தலைவர், பகுதிக் கழகச் செயலாளர் வி.இ.மதியழகன் தொடங்கி வைத்தார். அப்போது துறை அலுவலர்கள் செந்தில் சரவணன், ஜெயராமன், மகேந்திரன், ரவி மற்றும் கழக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று (12.08.2025) "முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம்" தொடங்கி வைத்தார்கள். அதனைத் தொடர்ந்து, அமைச்சர் மா.சுப்பிரமணியன் சென்னை, சைதாப்பேட்டை, மகூதி தெருவில் உள்ள வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் இல்லத்திற்கே சென்று குடிமைப் பொருட்களை வழங்கினார். இந்நிகழ்வில் மண்டலக்குழுத் தலைவர் கிருஷ்ணமூர்த்தி, வழக்கறிஞர் ஸ்ரீதரன் எம்.சி., மோகன்குமார் எம்.சி. கூட்டுறவுத்துறை அலுவலர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.

மாநிலக் கல்விக் கொள்கையை விளக்கி துண்டுப் பிரசுரங்கள் வழங்கல்!

11-ஆம் வகுப்பு பொதுத் தேர்வு ரத்து - மாணவர்களுக்கு முதல்வர் கொடுத்த பரிசு!

தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் இரா.இராஜீவ் காந்தி அறிக்கை!

சென்னை, ஆக.13-

சமத்துவம் மலரச் செய்யும் ஆயுதம் மாநிலக் கல்விக்கொள்கை என்றும், 8-ஆம் வகுப்பு வரை அனைவரும் தேர்ச்சி, 11-ஆம் வகுப்பு பொதுத் தேர்வு ரத்து செய்யப்படும் என்பதை மாநிலக் கல்விக் கொள்கையில் சேர்த்து வெளியிட்டிருப்பது இலட்சக் கணக்கான மாணவர்களுக்கும் அவர்தம் பெற்றோர்களுக்கும் நம் முதல்வர் கொடுத்த பரிசு என்று தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் இரா.இராஜீவ் காந்தி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் இரா.இராஜீவ் காந்தி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கல்வி என்பது ஒவ்வொரு மனிதனின் அடிப்படை உரிமை, அதனால் தான் தமிழ்நாட்டின் கடைக்கோடி மனிதனுக்கும் கல்வி சென்றுசேர வேண்டுமெனத் திராவிட இயக்கத் தலைவர்கள் தொடர்ந்து போராடி வருகிறார்கள். அதைப் பொறுக்க முடியாத சனாதன ஆர்.எஸ்.எஸ்., சங் பரிவார் அமைப்புகள் அதன் அடியாளாகச் செயல்படும் ஒன்றிய பா.ஜ.க. அரசு மூலம் கல்வியைக் குறிப்பிட்ட சமூகத்துக்கு மட்டுமே என்றாக்கி ஏழை எளிய மக்களுக்குக் கல்வியை எட்டாக்கனியாக்கும் வகையில் தேசிய கல்விக் கொள்கை எனும் மக்கள் விரோதக் கொள்கையை அறிமுகப்படுத்தியது.

சமூகத்திக்கு எதிரான தேசிய கல்விக் கொள்கையை ஒன்றிய பா.ஜ.க. அரசு எப்போது அறிமுகம் செய்ததோ அப்போதிலிருந்து இப்போது வரை அதன் தீமைகளைச் சுட்டிக்காட்டி அதற்கு எதிராகக் குரல் கொடுப்பதோடு அதற்கு மாற்றாக மாநிலக் கல்விக் கொள்கையை உருவாக்க' டெல்லி உயர் நீதிமன்ற முன்னாள் நீதிபதி முருகேசன் தலைமையில் 14 பேர் கொண்ட குழு ஒன்றையும் அமைத்து இந்தியாவின் முதல்வர்களுக்கெல்லாம் முதல்வர் என்பதை மீண்டும் நிரூபித்து இருக்கிறார் திராவிட நாயகர் தமிழக முதலமைச்சர் அவர்கள் தேசிய கல்விக் கொள்கை என்ற பெயரில் மத வெறுப்பை போதித்து, மத மேலாண்மைகளையும் புராண இதிகாசப் புரட்டுகளையும் கல்வி எனும் பெயரில் காவி கொள்கையை புகுத்த நினைக்கும் ஒன்றிய அரசுக்குத் தக்க பாடம் புகட்டும் வகையிலும் சாதியைத் தூக்கிப் பிடிக்காத சமத்துவத்தைப் போற்றும் வகையிலும் தமிழ்நாட்டு மாணவர்களின் நலனையும் எதிர்காலத்தையும் கருத்தில்கொண்டு மாநிலக் கல்விக் கொள்கையை வெளியிட்டுள்ளது தமிழ்நாடு அரசு

8ஆம் வகுப்பு வரை அனைவரும் பாஸ்!

11ஆம் வகுப்புப் பொதுத்தேர்வு ரத்து!

10, 11, 12 என தொடர்ச்சியாக மூன்று ஆண்டுகள் பொதுத்தேர்வுக்கு தயாராகும்போது மாணவர்கள் உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டு மன அழுத்தத்துக்கும் ஆளாகினர். எனவே, மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் 11ஆம் வகுப்புப் பொதுத் தேர்வை ரத்து செய்ய வேண்டும் எனத் தொடர்ச்சியாக வைத்த கோரிக்கையை கனிவோடு பரிசீலித்து 11ஆம் வகுப்பு பொதுத்தேர்வு ரத்து செய்யப்படும் என்பதை மாநிலக் கொள்கையில் சேர்த்து வெளியிட்டிருப்பது இலட்சக்கணக்கான மாணவர்களுக்கும் அவர்தம் பெற்றோர்களுக்கும் நம் முதல்வர் கொடுத்த பரிசு.

3ஆம் வகுப்பு 5ஆம் வகுப்பு 5ஆம் வகுப்பு எனத் தொடர்ச்சியாக மாணவர்களைத் தேர்வு எனும். சோதனைக் கூடத்தில் வைத்து அவர்களின் கல்வி சுற்றும் கனவைச் சிதைத்து தேர்வி தோற்பவர்களைக் குலக் கல்வி எனும் மோசடி வலையில் சிக்க வைக்க முயன்ற தேசிய கல்விக் கொள்கைக்கு எதிராக 1 முதல் 8ம் வகுப்பு வரை ஆல் பாஸ் என அறிவித்திருப்பது ஆகச் சிறந்த செயல் திட்டம்.

கட்டாயக் கல்வி உரிமை சட்டத்தின் அடிப்படையில் கொண்டு வரப்பட்ட இந்த ஆல் பாஸ் திட்டம் என்பது எல்லோருக்கும் எல்லாம் என எப்போதும் மக்கள் நலனை யோசிக்கும் தம் முதல்வரின் இந்தச் செயல்திட்டம் இடைநிற்றலைக் குறைக்கும் அதிலும் குறிப்பாக ஆதிதிராவிடர், பழங்குடியின மாணவர்களின் இடைநிற்றலை முற்றிலுமாகக் குறைக்கும் அருமருந்து

மும்மொழிக் கொள்கைக்கு சவுக்கடி; இருமொழிக் கொள்கையில் உறுதி!'

ஒன்றிய அரசு மும்மொழி கொள்கையை நாடு முழுவதும் திணிக்க முயலும் நிலையில் படிக்கத் தாய்மொழி தமிழும், உலகத்தை தொடர்புகொள்ள இணைப்பு மொழியாக ஆங்கிலமும் இருக்கும் என பேரறிஞர் அண்ணா வழியில் முத்தமிழறிஞர் கலைஞர் காப்பாற்றிய இருமொழி கொள்கையில்தான் தமிழ்நாடு எப்போதும் இருக்கும் என உறுதிபடத் தெரிவித்திருப்பது இந்தியைத் திணித்து இந்திய ஒன்றியத்தின் பன்மொழித் தத்துவத்தைச் சிதைக்கத் துடிக்கும் ஒன்றிய அரசுக்கு முதல்வர் அவர்கள் கொடுத்த சவுக்கடி

பெண்கல்விக்கு முக்கியத்துவம்

இடைநிற்றலை முற்றும் முழுதாக அழித்தல்!

தற்போது மாவட்டம் தோறும் மாதிரிப் பள்ளிகள் செயல்பட்டு வரும் நிலையில் இனி வட்டார அளவில் மாதிரிப் பள்ளிகள் வெற்றிப் பள்ளிகள் என்ற பெயரில் செயல்படுத்தப்படும் என்பதும் நவீன தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப, காலத்தின் தேவைக்கு ஏற்ப புதிய பாடத்திட்டம் உருவாக்கி அளிக்கப்படும் எனவும் தெரிவித்திருப்பது மாணவர்களின் மீதான முதலமைச்சரின் அக்கறையைக் காட்டுகிறது.

இது தவிர பெண்கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து, கிராமப்புற ஏழை எளிய மாணவர்களுக்கு ஏதுவான கற்றல் சூழலை உருவாக்கியிருப்பதோடு ஆசிரியர்களுக்குத் தனிப் பயிற்சி மலைவாழ் மாணவர்கள், மாற்றுத்திறனாளி குழந்தைகளின் கல்வியில் தனிக் கவனம் செலுத்தி அவர்களுக்குச் சிறப்பு கல்வி கிடைக்கும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதும் மனதாரப் பாராட்டத் தக்கவை.

தமிழ்நாடு எப்போதும் இந்தியாவிற்கு முன்னுதாரணமான மாநிலம் என்பதை மாநில கல்விக் கொள்கையின் மூலம் நம்முடைய திராவிட நாயகர் மீண்டும் ஒருமுறை திரூபித்துள்ளார். நம்முடைய கல்விக் கொள்கையைப் பின்பற்றி இனி மற்ற மாநிலங்கள் அவர்களுக்கென பிரத்தியேக கல்விக் கொள்கையை உருவாக்குவார்கள் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.

மோசமான சூழலில் சிக்கியுள்ள கல்வியைப் பொதுப்பட்டியலிலிருந்து மாநிலப் பட்டியலுக்கு மாற்ற வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. அனைத்தையும் சாத்தியப்படுத்தி வரும் நம் சாதனை நாயகர் இதிலும் சரித்திரம் படைப்பார் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. கல்வியை மாநிலப் பட்டியலுக்குக் கொண்டுவரும் தமிழக முதல்வரின் நடவடிக்கைக்கு மக்கள் களத்திலும், போராட்டக் களத்திலும் மாணவர் அணி உறுதுணையாக நிற்கும்

தேசியக் கல்விக் கொள்கை எனும் ஒன்றிய அரசின் நயவஞ்சகத்துக்குப் பதிலடியாக மாநிலக் கல்விக் கொள்கையை வெளியிட்டுள்ள திராவிட மாடல் நாயகர் முதலமைச்சர் அவர்களுக்கும் உற்றதுணையாக இருந்த கழக இளந்தலைவர் அவர்களுக்கும் அதைச் செயல்படுத்திய பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்களுக்கும் மாணவர் அணி சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம். \

கழகத் தலைவர் அவர்கள் வெளியிட்டுள்ள மாநிலக் கல்விக் கொள்கையை கருத்தரங்குகள், கலை நிகழ்ச்சிகள், துண்டுபிரசுரங்கள், போஸ்டர்கள் மூலம் தமிழ்நாடு முழுவதும் மாணவர் அணி கொண்டு சேர்க்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்

இவ்வாறு மாணவர் அணிச் செயலாளர் இரா.இராஜீவ் காந்தி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

கடம்பத்தூர் கிழக்கு ஒன்றியம் பாப்பரம்பாக்கம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு திருவள்ளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி. இராஜேந்திரன் நேரில் சென்று மருத்துவர்களிடத்தில் நோயாளிகளுக்கு முறையான மருத்துவ சிகிச்சை வழங்கிடுவதை ஆய்வு செய்தார். உடன் மாவட்ட கழக அவைத்தலைவர் க.திராவிடபக்தன், கடம்பத்தூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் கே. அரிகிருஷ்ணன், திருவாலங்காடு கிழக்கு ஒன்றிய செயலாளர் எஸ். மகாலிங்கம் ஆகியோர் உடனிருந்தனர்.

மதுரவாயல் தெற்குப் பகுதி

149வது வட்டச் செயலாளர் டி.ரமேஷின் தாயார் திருமதி. டி.சரோஜம்மாள் மறைவு!

கழகத்தினர் அஞ்சலி! இன்று இறுதிச் சடங்குகள்!

சென்னை, ஆக.13-

சென்னை - 87, வளசரவாக்கம், ஸ்ரீதேவி கார்டன் மெயின் ரோடு, எண்.2-ல் வசிக்கும் 149-ஆவது வட்டச் செயலாளர் டி.ரமேஷின் தாயாரும் - மாமன்ற உறுப்பினர் திருமதி.செல்வி ரமேஷின் மாமியாருமான திருமதி. டி.சரோஜம்மாள் அவர்கள் (வயது-85) நேற்று (12.08.2025) மாலை 5.00 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்து ஏராளமானகழகமுன்னணியினரும், நிர்வாகிகளும், தோழர்களும் அன்னாரின் உடலுக்கு அஞ்சலி செலுத்தினர். குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினர்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் இன்று (13.08.2025 -புதன்கிழமை) பிற்பகல் 3.00 மணியளவில் இல்லத்தில் இருந்து புறப்பட்டு வளசரவாக்கத்தில் உள்ள பிருந்தாவனம் இடுகாட்டில் இறுதிச் சடங்குகள் நடைபெறும் என, மதுரவாயல் தெற்குப் பகுதிக் கழக துணைச் செயலாளர் வே.மதியழகன் தெரிவித்துள்ளார்.

தென்காசி தெற்கு மாவட்டத்தில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட கழக செயலாளர் வே. ஜெயபாலன் தலைமையில் கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தென்காசி மேற்கு ஒன்றியம் பண்பொழி பேரூர் வடகரை பேரூர் செங்கோட்டை ஒன்றியம் புதூர் செ அச்சம் புதூர் பேரூர் ஆய்க்குடி பேரூர் சாம்பவர் வடகரை பேரூர் கடையநல்லூர் மேற்கு ஒன்றியம் ஆகிய ஒன்றிய நகர பேரூர் கழகத்தின் பாகம் முகவர்கள் கலந்த ஆலோசனைக் கூட்டத்தில் வீடு வீடாக சென்று வாக்காளர் பட்டியல் சரி பார்ப்பின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்து கழக சட்ட துறை இணை செயலாளர் கே.எஸ். இரவிச்சந்திரன் உரை ஆற்றினார் இதில் கழக சட்டத்துறை துணை செயலாளர் ராஜா முகமது, தொகுதி பொறுப்பாளர் மாநில மருத்துவ அணி துணை செயலாளர் கலை கதிரவன், மாவட்ட கழக நிர்வாகிகள் தென்காசி தெற்கு மாவட்ட கழக வழக்கறிஞர் அணி அமைப்பாளர் தங்கராஜ் பாண்டியன் மற்றும் வடக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் பிச்சையா ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.